

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் TN RISING ஐரோப்பிய பயணத்தின் இரண்டாம் கட்டத்தில் நேற்று (3.9.2025) இங்கிலாந்து நாட்டின், இலண்டன் நகரில், லாயிட்ஸ் லிஸ்ட் இன்டலிஜென்ஸ் நிறுவனம் (SEASEARCHER) சென்னையில் அதன் உலகளாவிய திறன் மையத்தை விரிவுபடுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர் டாக்டர் பு.உமாநாத், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண் ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, லாயிட்ஸ் லிஸ்ட் இன்டலிஜென்ஸ் நிறுவனத்தின் முதன்மை செயல் அலுவலர் வகாஸ் சமது, முதன்மை நிதி அலுவலர் தாமஸ் ஆண்டனி ஸ்வைன் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் TN RISING ஐரோப்பிய பயணத்தின் இரண்டாம் கட்டத்தில் நேற்று (3.9.2025) இங்கிலாந்து நாட்டின், இலண்டன் நகரில், கல்வி ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக எக்ஸிடெர் பல்கலைக்கழகம் தமிழ்நாட்டுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது. இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர் டாக்டர் பு. உமாநாத், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண் ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, எக்ஸிடெர் பல்கலைக்கழகத்தின் தலைவர் மற்றும் துணை வேந்தர் ரிச்சர்ட் பொலட், உலகளாவிய ஈடுபாட்டு இயக்குநர் பீட்டர் கிளர்க் ஆகியோர் உடனிருந்தனர்.

## இலண்டனில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் ‘ரோல்ஸ் ராய்ஸ்’ நிறுவன உயர் அதிகாரிகளுடன் சந்திப்பு!

# தமிழ்நாட்டின் நீண்டகால உத்திக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் கையெழுத்து!

இலண்டன், செப்.4-

**உலகின் முன்னணி விண்வெளி மற்றும் பாதுகாப்பு தொழில்நுட்ப நிறுவனமான ரோல்ஸ் ராய்ஸ் நிறுவனத்தின் உயர் அலுவலர்களுடனான சந்திப்பின்போது தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் ஒசூரில் கூட்டு முயற்சியில் அமைக்கப்பட்டுள்ள IAMPL நிறுவனத்தின் விரிவாக்கம் தொடர்பாக ஆலோசனை வுடன், லாயிட்ஸ் லிஸ்ட் இன்டலிஜென்ஸ், வில்சன் பவர் & டிஸ்ட்ரிபியூஷன் டெக்னால ஜிஸ், பிரிட்டானியா RFID டெக்னாலஜிஸ் இந்தியா, எக்ஸிடர் பல்கலைக்கழகம், Ecole Intuit Lab ஆகிய நிறுவனங் களுடன் புரிந் துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப் பட்டன.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் TN RISING ஐரோப்பிய பயணத்தின் இரண்டாம் கட்டத்தில் நேற்று (3.9.2025) இங்கிலாந்து நாட்டின், இலண்டன் நகரில் பல்வேறு தொழில் நிறுவனங்களின் உயர் அலுவலர்களுடனான தொடர்ச்சியான உயர் மட்ட கூட்டங்களுக்கு தலைமை தாங்கி, பாதுகாப்பு மற்றும் விண்வெளி, கப்பல் கட்டும் நுண்ணறிவு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, ஜவுளி தொழில்நுட்பம் மற்றும் வடிவமைப்பு உள்ளிட்ட தொழில் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இப்புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், தமிழ்நாட்டை தேசிய மற்றும் உலகளாவிய முன்னணி மாநிலமாக நிலைநிறுத்துவதில், அதிக மதிப்புள்ள மற்றும் எதிர்காலத்திற்கு பொருத்தமான துறைகளில் தமிழ்நாட்டிற்கான நீண்டகால உத்திக்கான நடவடிக்கைகளைக் குறிக்கின்றன.

### ரோல்ஸ் ராய்ஸ் நிறுவனத்தின் உயர் அலுவலர்களுடன் சந்திப்பு

உலகின் முன்னணி விண்வெளி மற்றும் பாதுகாப்பு தொழில்நுட்ப நிறுவனங்களில் ஒன்றான ரோல்ஸ் ராய்ஸ் நிறுவனத்தின் உயர் அலுவலர்களுடனான தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சந்திப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

இச்சந்திப்பின்போது, MRO வசதி, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, பயிற்சி மையம் மற்றும் ஒசூரில் அதன் IAMPL கூட்டு முயற்சியின் குறிப்பிடத்தக்க விரிவாக்கம் ஆகியவற்றுடன், தமிழ்நாட்டில் அதன் செயல்பாடுகளை விரிவுபடுத்துவதில் இந்நிறுவனம் தனது வலுவான ஆர்வத்தை வெளிப்படுத்தியது. இந்தியாவின் இரண்டு பாதுகாப்பு தொழில்துறை வழித்தடங்களில் ஒன்றான தமிழ்நாட்டில், ரோல்ஸ் ராய்ஸ் நிறுவனத்தின் இந்த ஈடுபாடு, மேம்பட்ட விண்வெளி உற்பத்திக்கான மையமாக மாநிலத்தின் திறனை விளக்குகிறது.

### கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

லாயிட்ஸ் லிஸ்ட் இன்டலிஜென்ஸ் நிறுவனம் (SEASEARCHER) சென்னையில் அதன் உலகளாவிய திறன் மையத்தை விரிவுபடுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. இது 2026 நிதியாண்டில் 200 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கும். கடல்சார் இடர் மேலாண்மை, காப்பீடு மற்றும் கப்பல் கண்காணிப்பு பகுப்பாய்வுகளில் உலகின் முன்னணி நிறுவனமான லாயிட்ஸ் நிறுவனத்தின் விரிவாக்கம், கப்பல் கட்டுதல், துறைமுக மேலாண்மை மற்றும் கடல்சார் தொழில்நுட்பத்தில் தமிழ்நாட்டின் திறன்களை கணிசமாக மேம்படுத்தும். இதன் முதன்மையான SEASEARCHER நிறுவனம், உலகளாவிய கப்பல் இயக்கங்கள், உரிமை கட்டமைப்புகள் மற்றும் துறைமுக நடவடிக்கைகள் பற்றிய நிகழ்நேரத் தெரிவுநிலையை வழங்குகிறது. இது தமிழ்நாட்டின் பரந்த நீலப் பொருளாதார திறனை ஊக்குவிப்பதாக அமையும்.

வில்சன் பவர் & டிஸ்ட்ரிபியூஷன் டெக்னாலஜிஸ் நிறுவனம் தமிழ்நாட்டில் ஒரு புதிய மின்சார மின்மாற்றி உற்பத்தி மையத்தை நிறுவிட ரூ.300 கோடி முதலீடு மற்றும் 543 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் வழங்கிடும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது. அதன் உற்பத்தியில் 80 முதல் 90 சதவிகிதத்திற்கும் அதிகமானவை புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களுக்குச் செல்கிறது. இது, தமிழ்நாட்டின் பசுமை எரிசக்தி உற்பத்தி மூலதனமாக மாறுவதற்கான நேரடியாக பங்களிப்பை அளிப்பதோடு, அதன் மாசற்ற தொழில்நுட்ப மதிப்புச் சங்கிலியை வலுப்படுத்தும்.

இந்தியாவின் முன்னணி ஜவுளி ஏற்றுமதி மையமாக தமிழ்நாட்டின் நிலையை வலுப்படுத்தும் வகையில், இங்கிலாந்தை தலைமையிடமாகக் கொண்ட பிரிட்டானியா கார்மென்ட் பேக்கேஜிங்கின் துணை நிறுவனமான பிரிட்டானியா RFID டெக்னாலஜிஸ் இந்தியா நிறுவனம், திருப்பூர் மற்றும் நாமக்கல்லில் அதிக திறன் கொண்ட RFID Tag உற்பத்தி பிரிவை அமைக்க ரூ.520 கோடி முதலீடு மற்றும் 550 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கிடும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது. இதன்மூலம், ஆடைத் துறையில் தடமறிதல் மற்றும் விநியோகச் சங்கிலி டிஜிட்டல் மயமாக்கலை ஆதரிப்பதோடு, ஏற்றுமதி போட்டித்தன்மையையும் அதிகரிக்கும்.

கல்வித் துறையில், கோயம்புத்தூரில் வடிவமைப்பு சார்ந்த உயர்கல்வி நிறுவனத்தைத் தொடங்க Ecole Intuit Lab நிறுவனம், சக்தி எக்சலன்ஸ்அகாடமியுடன் கூட்டாண்மையில் இணைந்து, புதுமை மற்றும் தனித்துவ அடையாளத்தின் (Branding) முக்கிய இயக்கியாக படைப்பாற்றல் பொருளாதாரம் மாறி வருவதால், இந்த முயற்சி தமிழ்நாட்டில் அடுத்த தலைமுறை படைப்பாற்றல் நிபுணர்களை உருவாக்கும்.

கல்வி ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக எக்ஸிடெர் பல்கலைக்கழகம் தமிழ்நாட்டுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது. கூட்டு ஆராய்ச்சி, ஆசிரியர் பரிமாற்ற திட்டங்கள் மற்றும் முன்னுரிமைத் துறைகளில் உலகளாவிய அறிவு பரிமாற்றத்தை வளர்ப்பதில் இந்த கூட்டாண்மை கவனம் செலுத்தும்.

இந்த சிறப்புமிக்க புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், துறை ரீதியான ஒத்துழைப்பை மேம்படுத்தவும், உயர்தர சர்வதேச முதலீடுகளை ஈர்க்கவும், இந்தியாஇங்கிலாந்து தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை (Free Trade Agreement) தமிழ்நாடு பயன்படுத்திக் கொள்வதற்கான உறுதியான எடுத்துக்காட்டுகளில் ஒன்றாகும். FTA கட்டமைப்பிலிருந்து கிடைக்கும் கூடுதல் வாய்ப்புகளை ஆராய்ந்திட இன்று காலை பல கூடுதல் கூட்டங்கள் நடத்தப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர் டாக்டர் பு. உமாநாத், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண் ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

### அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமை! டி.ஆர்.பாலு எம்.பி. – படப்பை ஆ.மனோகரன் முன்னிலை! மாங்காடு நகரம்

## பட்டூர் எஸ்.ஜபருல்லா - யாஸ்மின் ஜபருல்லா இல்ல மணவிழா!

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்துரை!

சென்னை, செப். 04 –

மாங்காடு நகரக் கழகச் செயலாளர் – நகர்மன்ற துணைத் தலைவர் பட்டூர் எஸ்.ஜபருல்லா – நகர்மன்ற உறுப்பினர் யாஸ்மின் ஜபருல்லா ஆகியோரின் புதல்வி ஜெ.சனோபர் பசீலாவுக்ும், சென்னை – புரசைவாக்கம் எஸ்.ஏ.ஏ. முகைதீனின் புதல்வர் எம்.அப்துல் மாலிக் சல்மானுக்கும் மணவிழா 7.9.2025 – ஞாயிறு காலை 10.30 மணியளவில் திருவேற்காடு, பெருமாளகரம் சாலை, ஜி.பி.எஸ். பேலஸில் நடைபெறுகிறது.

இம்மணவிழாவிற்கு மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன் தலைமை வகிக்கிறார்.

கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி., ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மணவிழாவில் கழக இளைஞர் அணிச் செயலாளர் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகிறார்.

இம்மணவிழாவில் அமைச்சர்கள் கே.என்.நேரு, ஆவடி சா.மு. நாசர், பி.கே. சேகர்பாபு, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, கு.செல்வப் பெருந்தகை எம்.எல்.ஏ., மீ.அ.வைதியலிங்கம், அன்பகம் கலை, க.செல்வம் எம்.பி., இ.கருணாநிதி எம்.எல்.ஏ., எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன் எம்.எல்.ஏ., மு. அப்துல் வகாப் எம்.எல்.ஏ., சேடப்பட்டி மு.மணிமாறன், ஆ. கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ.,

கே.நவாஸ்கனி எம்.பி., வழக்கறிஞர் இரா.கிரிராஜன் எம்.பி., மேயர் க.வசந்தகுமாரி, மேயர் பிரியா ராஜன், நா.எழிலன் எம்.எல்.ஏ., இ.பரந்தாமன் எம்.எல்.ஏ., எம்.கே.மோகன் எம்.எல்.ஏ., காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ., ப.தாயகம்கவி எம்.எல்.ஏ., பூச்சி எஸ்.முருகன்,

துறைமுகம் காஜா, பிரபு கஜேந்திரன், இறையன்பன் குத்தூஸ், எ.எம்.விக்கிரம ராஜா, கோ. காமராஜ், கே.ஜி. பாஸ்கர் சுந்தரம், எம். யாக்கூப், மா.வை. மகேந்திரன், சுமதி முருகன் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், பகுதிக் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், நகர்மன்ற உறுப்பினர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், கழகச் செயல்வீரர்கள் பங்கேற்று சிறப்பிக்கின்ற னர்.

ஜெ.முகமது வசுருதீன் சுகைல் (ஏ) ஜ⁶கி நன்றி கூறுகிறார்.



தூத்துக்குடி மாவட்டம், புன்னைக்காயலில் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் தனது நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 17.50 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மைய கட்டடம் மற்றும் காயாமொழியில் தனது நாடாளுமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 30 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஆகியவற்றை பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். தூத்துக்குடி மாவட்டம் முழுவதும் உள்ள பள்ளிகளில் 1.5 இலட்சம் மரக்கன்றுகள் நடும் பணியினை, காயாமொழியில் உள்ள சி.பா.ஆதித்தனார் மேல்நிலைப் பள்ளியில் தொடங்கி வைத்தார். உடன், மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர். இராதாகிருஷ்ணன், மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர். எஸ்.உமரி சங்கர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம், மாவட்ட ஆட்சியர் இளம் பகவத், ஒன்றிய செயலாளர் சதிஸ்குமார், ஏ.பி.ரமேஸ், ஆழ்வை சேர்மன் ஜனகர் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

---

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளையொட்டி

## “அன்னம் தரும் அமுத கரம்” 196 வது நாள்!

### எழும்பூர் தெற்குப் பகுதியில் – அமைச்சர் பி.கே. சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை, செப்.4-

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 196 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (03.09.2025), எழும்பூர் தெற்கு பகுதி: 1) வட்டம் 58 அல்லிக்குளம். 2) வட்டம் 58அ A.P ரோடு லியோ பேக்கரி அருகில். சென்னை ஆகிய பகுதிகளில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு அவர்கள், தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.



இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மேயர் பிரியா ராஜன், வி.சுதாகர், சொ.வேலு, கோ.ஏகப்பன், கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன்பிரசன்னா, புனிதவதி எத்திராசன், கே.எஸ்.எம். நாதன், கோ.மணி, ஜி. தாமோதரன், பி.எம். யாழினி, ராஜேஸ்வரிஸ்ரீதர், பரிதிஇளம்சுருதி, எழும்பூர் தெற்கு/வடக்கு வட்ட கழக செயலாளர்கள்: வி. விஜயகுமார், ஆர்.பாபு, டால்பின் எஸ்.அரிகிருஷ்ணன், இ.மொய்தீன், வான்மதி கதிரவன், எல்.சுந்தர்ராஜன், தி.தயாளன், வி. அபாய், சு.மனோகர், ந. பாலு, ஆர்.எம்.ரங்கநாதன், சி.சேகர்,

ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ். முரளி, பெரம்பூர் ஆர். ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.